தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் : 521

श्रीः

अलकापुरिमाहात्म्यम्

அளகாபுரிமாகாத்மியம்

(தஞ்சைநகர்ப்பெருமை)

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் : 521

श्रीः

अलकापुरिमाहात्म्यम्

அளகாபுரிமாகாத்மியம்

(தஞ்சைநகர்ப்பெருமை)

பதிப்பாசிரியர்:

முனைவர் ஆ. வீரராகவன்

சம்ஸ்க்ருதபண்டிதர்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்.

2008

அளகாபுரிமாகாத்மியம்

0521

விலை : ரூ. 40-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	அளகாபுரிமாகாத்மியம் (தஞ்சைநகர்ப்பெருமை)
பதிப்பாசிரியர்	:	முனைவர் ஆ. வீரராகவன், M.A., B.L.I.S., Ph.D.,
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்	:	521
மொழி	:	சம்ஸ்கிருதம் - தமிழ்
பதிப்பு	:	முதற் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	செப்டம்பர், 2008
தாள்	:	TNPL 18.6 kgs.
நூல் அளவு	:	21 x 14 c.m.
பக்கங்கள்	:	80
படிகள்	:	250
எழுத்து	:	16 & 12
அச்சிட்டோர்	:	சரசுவதி மகால் நூலக அச்சகம்
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	தலபுராணம்
விலை	:	ரூ. 40-00

வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சைத் தரணியில் ஓலைச்சுவடிகளையும் கையெழுத்துப் பிரதிகளையும் ஏராளமாகத் தன்னகத்தே கொண்டு திகழ்வது சரசுவதி மகால் நூலகம். அவற்றைப் பாதுகாப்பது மட்டுமின்றி அரிய சுவடிகளைத் தேர்ந்தெடுத்து மக்களுக்குப் பயன்படும் வகையில் நூலாக்கம் செய்யும் பணியையும் இந்நூலகம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. சம்ஸ்க்ருதம், தமிழ், மராத்தி, மோடி, தெலுங்கு ஆகிய மொழித் துறைகளில் ஒன்றான சம்ஸ்கிருதத் துறையில் சுவடி எண். B.1838/D.10042ல் "அளகாபுரி மகாத்மியம்" பதிவாகியுள்ளது.

இந்நூல் தஞ்சை நகரின் பெருமையை விளக்கமாக எடுத்தியம்புவதால் அளகாபுரி மாகாத்மியம் என்று பெயர் பெற்றுள்ளது.

இதுகாறும் வெளிவராத சுவடிநூல் இதுவாகும். தலவரலாற்று ஆய்வாளர்களுக்கும், வடமொழி ஆர்வலர்களுக்கும், பொதுமக்களுக்கும் இந்நூல் பெரிதும் பயன்தரும். இந்நூலின் பதிப்பாசிரியர் தனது ஆய்விற்குப்பலம் கூட்டும் வகையில் தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் பலவற்றையும் மராட்டிய கல்வெட்டு ஆதாரங்களையும் மிகச்சிறப்பாக கட்டிக்காட்டியுள்ளார்.

இந்நூலை சுவடியிலிருந்து பெயர்த்தெழுதி சிறந்த முறையில் பதிப்பித்த இந்நூலக சமஸ்கிருதப் பண்டிதர் முனைவர் ஆ. வீரராகவன் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த பாராட்டுகள்.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கும், இந்நூல் கணினி அச்சில் வெளிவர கணினிப் பிரிவில் பணியாற்றியவர்களுக்கும், நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் பொறுப்பு வகிக்கும் திரு. சாமி சிவஞானம் அவர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எம். எஸ். சண்முகம், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
21-9-2008

முன்னுரை

தஞ்சைத் தரணியில் ஓலைச்சுவடிகளையும், கையெழுத்துப் பிரதிகளையும் ஏராளமாகத் தன்னகத்தே கொண்டு திகழ்வது சரசுவதி மகால் நூலகம். அவற்றைப் பாதுகாப்பது மட்டுமின்றி அரிய சுவடிகளைத் தேர்ந்தெடுத்து மக்களுக்குப் பயன்படும் வகையில் நூலாக்கம் செய்யும் பணியையும் இந்நூலகம் மேற்கொண்டு வருகிறது. சம்ஸ்க்ருதம், தமிழ், மராத்தி, மோடி, தெலுங்கு ஆகிய மொழித்துறைகளில் ஒன்றான சம்ஸ்க்ருதத் துறையில் "அளகாபுரி மாகாத்மியம்" பதிவாகியுள்ளது. அச்சுவடி தரும் செய்திகளைச் சிறிது பார்ப்போம்.

நூற்பெயரும் நூற்சார்ந்த செய்திகளும்

அளகை என்பது குபேரனின் பட்டணத்திற்குப் பெயர். தஞ்சமாநகரத்திற்கு குபேரன் வருகை தந்ததாகக் கூறப்படுவதால் இந்நகருக்கு தென் அளகைப் பட்டணம் என்பது பெயர். இச்சுவடி நூல் 70 முதல் 77 வரையிலான எட்டு அத்யாயங்களில் தஞ்சை நகர்ப் பெருமைதனை விரிவாக எடுத்துரைப்பதால் இந்நூலிற்கு அளகாபுரி மகாத்மியம் என்று பெயர் பெற்றுள்ளது. தஞ்சாவூரிலுள்ள தொப்பாரங்கட்டி பிள்ளையார் திருநாமம் அளகேச்வர பிள்ளையார் (தஞ்சைத்

திருக்கோயில்கள் - ப. எண். 67) என்பதும் ஈண்டு சிந்திக்கத் தக்கது. அளகாபுரிக்குப் பிரதிநாமமான தஞ்சை ராஜகம்பீர வளநாட்டில் உறையூர் சிங்காதனத்துச் சாவடியான சோழ மண்டலத்தில் இடம் பெற்றுள்து. இது மகூம், மாளவம், மகதம் முதலான ஐம்பத்தாறு தேசத்துக்குள் கர்ணாட தேசத்தில் சோழமண்டலத்தில் மேலான தெய்வபூமி யாகவும் சிறப்புற்றுத் திகழ்கின்றது. * இந்நகரின் பெருமை யுரைக்கும் அளகாபுரி மாகாத்மியத்தில் குபேரன் தஞ்சைக்கு வருதலும், அவனது இருப்பிடம் பற்றிய செய்திகளும், வசிஷ்டேச்சுவர விஜயாபுரிக் குறிப்புகளும், அமுதகலசப்போரும், ஆனந்தவல்லி தஞ்சபுரீசர் அவதாரமும், அசுரர்களை அழிக்க ஆனந்தவல்லி தன் சக்தியை ஏகவீராதியராகத் தோன்றச்செய்தலும், ஏகவீரா, ஜயந்தி, மர்தினீ, சண்டகாதினீ ஆகிய சக்திகள் முறையே தண்டகன் வீரன், வஞ்சகன், தஞ்சகன் போன்றோரை அழித்தலும் இந்நூலில் கூறப்படுகின்றன.

சண்டகாதினியிடம் போரிட்ட (கடைசி அசுரன்) தஞ்சகன், "நாம் இருவருமே போரின்பால் கோடிவிரணம் அடைந்துள்ளோம். ஆதலால் நீ கோடிவிரண(வன) முடையாள் (கோடியம்மன்) என்ற பெயரில் இங்கேயே அமைந்தருள் பாலித்து வரவேண்டும். இத்தலத்துறை நாதர் 'தஞ்சபுரீசர்' என்றும், இத்தலம் 'தஞ்சபுரீ' என்றும் பெயர் பெறவேண்டும். இதுவே யான் வேண்டும் இறுதிவரம்" என்பதாகக் கேட்டுக்கொண்டான்.

---

* தஞ்சை மராட்டியர் செப்பேடுகள் - 2, 10, 13, 17, 21, 27 & பக்க எண். 18, 87, 98, 117, 149, 185, தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள் - 110, P. No. 179.

தஞ்சகனின் வேண்டுகோளின்படியே இந்நகரின் பெயர் தஞ்சாவூர் ஆயிற்று. தஞ்சை விண்ணாற்றங்கரையில் கோடியம்மன், தஞ்சபுரீசர் ஆலயங்களையும் இன்றைக்கும் நாம் கண்டு மகிழ்கிறோம்

பதிப்பிற்குதவிய சுவடிகள்

அளகாபுரிமாகாத்மியம் என்னும் இந்நூற்பதிப்பிற்கு உதவிய சுவடி சரசுவதி மகால் சம்ஸ்க்ருதத் துறையில் B. No. 1838/D.No. 10042 என்ற எண்ணில் பதிவாகியுள்ளது. இச்சுவடி தேவநாகரி எழுத்தில் எழுதப் பெற்றுக் காகிதச் சுவடியாகக் காட்சி தருகின்றது.

நூற்பதிப்பு முறை

இச்சுவடி நூலை சுவடியிலிருந்து பெயர்த்தெழுதி உரிய முறையில் திருத்தம் செய்து வெளியீட்டாளர் முகவுரை, பதிப்பாசிரியர் முன்னுரை, தமிழ்க் கதைச்சுருக்கம், நூற்பகுதி ஆகியன அமையச் சிறப்பாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

பயன்கள்

இதுகாறும் வெளிவராத சுவடிநூல் இதுவானபடியால் தலவரலாற்று ஆய்வாளர்களுக்கும், சம்ஸ்க்ருத ஆர்வலர் களுக்கும், பொதுமக்களுக்கும் இந்நூல் பெரிதும் பயன் தரும்.

நன்றியுரை

அளகாபுரி மாகாத்மியம் என்னும் இந்நூலினைப் பதிப்பிக்க ஆணை வழங்கிய மாவட்ட ஆட்சித் தலைவர்

மற்றும் நூலக இயக்குனர் எம். எஸ். சண்முகம் இ. ஆ. ப. அவர்களுக்கும், நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி சிவஞானம் அவர்களுக்கும், இந்நூலினைச் சிறப்பாக அச்சிட்டுத்தந்த நூலக கணினி அச்சுத் துறையினருக்கும், நூற்கட்டுப் பிரிவினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர்
16-9-2008

முனைவர் **ஆ. வீரராகவன்,**
சம்ஸ்க்ருதபண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்.

-------✿--------

ஸ்ரீ:

அளகாபுரி மாகாத்மியம்

எனும்

தஞ்சைநகர்ப்பெருமை

கதைச்சுருக்கம்

எழுபதாம் அத்யாயம்

சௌனகர்

ஒரு சமயம் நைமிசாரண்யத்தில் ஸத்ரயாகம் நடந்தது. அதில் தேவ ரிஷிகள் பிரம்ம ரிஷிகள் போன்றோர் கலந்து கொண்டனர். ஆங்கே அலங்கரிக்கப்பட்ட யூபஸ்தம்பங் களும், இடைவிடா வேள்வியால் எங்குமே புகை மண்டலங் களும் காணப்பட்டன. வேத ஒலியும் விழா ஒலியுமாகக் காணப்படும் அத்தலத்தில் வேள்விக்காக இந்திராதி தேவர்கள் குழுமியிருந்தனர். இத்தனை கோலாஹலத்தின் நடுவே உலக நன்மையைக் கருதி காசித்தலப்பெருமை குறித்த கதா பிரசங்கம் நடந்துகொண்டிருந்தது. காசித்தலம் குறித்த கதாபிரசங்கத்தில் தேவரீரால் தக்ஷிண அளகையின் பெருமைகள் சுருக்கி கூறப்பட்டன.

அந்த அளகாபுரி எதனுடைய தென்பகுதியில் உள்ளது? குபேரன் எதற்காக ஆங்கே இறைவனைப் பூசித்தார் ? புண்ய நதிகள் அங்கே ஓடுகின்றனவா ? புண்யவனம் அங்குண்டோ? இதையெல்லாம் பற்றி அறிய ஆவல் கொண்ட முனிக்கணங்கள் எனது முன்னிலையில் இங்கே குழுமியுள்ளனர். தங்களைப் போற்றிப் பாடுவதற்கும்

நாங்கள் தகுதியற்றவர்கள். வியாஸரைப் போன்று பற்றற்றவரான சூதரே! எங்களது இவ்வேண்டுகோளை ஏற்று ஆவலையும் நிறைவேற்றுங்கள்" என்று முனிவர்களின் சார்பில் கேட்டுக்கொண்டனர். சௌனகரின் மொழிக்கிணங்கிய சூதர், அளகாபுரி வைபவம் மிகவும் ரகசியமானது புண்யம் தரவல்லது. கைலையின் வடபார்சுவத்தில் உத்தர(வட) அளகை உள்ளது. மகேஸ்வரனின் நண்பனான குபேரனின் இருப்பிடம் ஜம்பூத்வீபத்தின் மேருமலைக்குத் தெற்கிலும், கர்மபூமியான பாரதத்தில் காவிரிக்குத் தெற்கிலும் அமைந்துள்ளது. காவிரியின் பெருமை முன்னரே நீவீர் அறிந்துள்ளீர். காவிரியை நினைத்தாலே பாபங்கள் நீங்கும். பார்த்தாலே வீடுபேறு கிட்டும். இத்தகைய நதி மனித லோகத்தில் காணப்படுகின்றது. நிற்க! எதைப்பற்றிக் கேட்டால் பெருமை மேன்மேலும் வளர்கிறதோ ? அந்த அளகாபுரியின் விருத்தாந்தத்தைக் கூறுகின்றேன். கவனமாகக் கேளுங்கள்" எனத்தொடங்குகின்றார் சூதர்,

சிவபெருமானின் அருளால் விச்ரவசுவின் புதல்வன் வைச்வரவணன் உலகாளும் பொறுப்பைப் பெற்றான். பாலப்பிராயத்தே அவனுக்கு சிவபூசையில் நாட்டமிருந்தால் புண்ணியத் தலங்களிலும், நதிக்கரைகளிலும் உள்ள தேவாலயங்களில் சிவபூசையை நடத்தி வந்தான் ஒரு சமயம் வைச்ரவணன் புஷ்பக விமானத்தில் வான் வழியாய்ச் செல்லுங்கால் காவிரிக்கரையின் பெருமையையுமறிந்து, காவிரிக்கரைச் சிவபெருமானை பூசிக்க எண்ணங் கொண்டான். அப்போழ்து அவன் செவிமடுத்த ஒரு வானிலைச் செய்தியை சூதர்,

"ஓ விச்ரவசுவின் புதல்வனே ! சிவபூசையில் நாட்டமுடையவனே ! உன்னுடைய புண்யத்தாலும், சிவபெருமானின் அருளாலும், காவிரி தீரத்தின் சிவபெருமானை பூசிக்கிறேன் என்ற பெருமணங் கொண்டவனே ! நீ சிவபூசை செய்வதற்கு உரிய இடத்தைக் கூறுகிறேன் கேள், காவிரியின் தென்கரையில் ½ யோசனை தூரத்தில் பலக்கிளைகளுடன் ஒரு வன்னிமரமுள்ளது. அதனடியில் பொன்னிறமாய் விளங்கும் சிறந்ததொரு பெரிய லிங்கமுள்ளது. அதில் சிவபெருமான் எழுந்தருளி மேற்றிசை நோக்கி அருள்பாலிக்கின்றார். வசிஷ்டேச்வரத்திற்கு தென்மேற்கில் கால்யோஜனை தூரத்தில், தேவர்களுக்கும், தானவர்களுக்கும் போர் நடந்தது. போரில் தேவர்கள் தோல்வியைத் தழுவினர். சோகமுற்ற தேவர்கள் தானவர்களை வெற்றிக்கொள்ளும் எண்ணத்தோடு வன்னி மரத்தடியில் அருள்பாலிக்கும் சிவபெருமானை விஜயம் பெற வணங்கினர். தேவர்களின் பூசையால் மகிழ்ந்த சிவபெருமான் சக்தி ஸ்கந்த நந்தி பிரமத கணங்கள் ஆகியவற்றுடன் வன்னி மரத்தடி லிங்கத்தில் ஆவிர்பவித்தார். அதைக்கண்டு போர்பயம் நீங்கிய இந்திரன் வாயு முதலான தேவர்கள் அவ்வனத்தில் கிடைக்கும் பூ, பழம், வேர் முதலியவற்றால் உலகநாயகனை மகிழ்வித்தனர். ரதந்திர கல்பத்தில் தேவர்கள் தானவர்களுடன் வீரமாய்ப் போரிட்டு போரில் வெற்றி வாகையும் சூடினார். அந்த சமீவனக்ஷேத்திரம் அமரர்க்கும் அரக்கர்கட்கும் நடந்த போரில் அமரர்கள் வெற்றி வாகை சூட (விஜயமடையக்) காரணமானதால் **விஜயாபுரீ** என்றும் வெற்றிபெற்ற அமரர்கள் வீரதீரத்துடன் போரிட்டதால் **மகாவீரபுரீ** என்றும் அழைக்கப்படுகின்றது. அத்தலத்தில் சிவபெருமானை நீ ஒரே ஒரு மலர் கொண்டு பூசனை செய்தாலே போதும். அவருனக்கு அருள் தருவார்.

உன்னுடைய விருப்பங்களும் ஆங்கே ஈடேறும் என்று விவரித்து அதன் அடிப்படையாக விஜயாபுரிப் பெருமைதனை இந்த எழுபதாம் (அத்யாயமாகிற முதல்) அத்யாயத்தினை விளம்பி நிறைவேற்றினார்.

எழுபதாம் அத்யாயக் கதைச்சுருக்கம் முற்றும்

------- ⁂ -------

எழுபத்தோறாம் அத்யாயம்

சூதர்,

விஜயாபுரிப் பெருமைதனைக் கேட்ட வைச்ரவணன் சூதரால் அடையாளங்காட்டப்பெற்ற தலம் தேடித் தென்திசை நோக்கிப் புறப்பட்டான். ஒருவழியாய்ச் சமீவனத் தலத்தையும் வந்தடைந்தான். ஆங்கே முனிக்கணங்கள் மரவுரி தரித்து தத்தம் தவத்தால் சிவபெருமானை மகிழ்வித்தனர். ஆங்கே வசிக்கும் மனிதர்களிடத்தில் கருனை எனும் குணமும், எலி, பூனை, பாம்பு, கீரி ஆகிய பிராணிகளிடத்தில் ஒற்றுமையும் காணப்பட்டது. எங்கு தேவர்களுக்கு பரமேச்வரன் அருள்புரிந்தாரோ ஆங்கே அனைவர்க்கும் அருள்புரிய விஜயபுரீசர் எழுந்தருளியிருக்கின்றார். ஆனந்தவல்லி அம்பாள் அருள்பாலிக்கும் அங்கே ஆனந்தத்திற்கு எல்லையே கிடையாது. மேலும் இத்தலப் பெருமைதனை இவ்வளவே என்று யாராலும் கூற முடியாது. இத்தலப் பெருமை உணர்ந்தே ஸநகர், நாரதர் போன்ற மஹரிஷிகள் இங்கு நித்யவாஸம் புரிகின்றனர். இத்தலப்பெருமையுணர்ந்த யாரும் வேரிடம் செல்ல விரும்பார். இத்தலத்தில் மேற்கொள்ளப்படும் அணு அளவு தானம் மேருமலைக் கொப்பான பயனைத் தரும்.

இத்தலத்தில் குபேரன் புஷ்பக விமானத்திலிருந்து இறங்கி பாதயோசனை தொலைவு பரந்த அளவில் வன்னி மரத்தடியில் காணப்பெறும் சிவபெருமானையும், பராசர முனிவரையும் வணங்கி மகிழ்ச்சியுற்றான். முனிவரும் குபேரனைப் புகழ்ந்து, நல்வரவு கூறி, ஆஸனாதிகளைச் சமர்ப்பித்து நலம் விசாரித்தார். குபேரனும் தம் நலம் கூறி தமக்கேற்பட்ட நிகழ்வினையும் வெகு விளக்கமாக விவரித்தான். நிகழ்வுகள் அனைத்தையும் கேட்டு மகிழ்ந்த பராசர முனிவர், சிவபூஜாபராயணரான குபேரனை கௌரவித்து, சிவபூஜையை இவ்விடம் மேற்கொள்ளுங்கள் என்றும், குபேரனே ! நீவிர் கண்டது உமது பாக்கியத்தாலன்றோ ! இந்த க்ஷேத்திரத்தின் பெருமை யாரால்தான் கூற முடியும் ? இத்தலத்தில் மகாதேவர் ஸ்வயமாகவே தோன்றியுள்ளார். நானும் இங்கே சிவபூஜை செய்து அம்ருதம் பெற்ற பாக்கியத்தையடைந்து அம்ருத மயமான லிங்கத்தையும் நாட்டியுள்ளேன். நீயும் இத்தலத்தில் சிவபெருமானைப் பூசித்து எண்ணிய பயன்பெறுவாயாகுக" என்றார். அவ்வாறு கூறியதைக் கேட்ட குபேரரும் வன்னி மரத்தடியில் சிவபெருமானை பற்பல உபசாரத்துடன் பூசித்து வணங்கினார். குபேரனின் பூஜையால் மகிழ்ந்த பரமேச்வரன், திங்களைத் தலையிலணிந்தவராய், மூன்று கண்களோடு விடைவல்லானாக, பார்வதீ தேவியருடன் ஸ்கந்தன் நந்தி ஆகியோர் புடைசூழ கோடி சூர்ய பிரகாசத்துடன் கோடி திங்களின் குளிர்ச்சியைப் பெற்றவராய், நீலகண்டராய், விடைக்கொடியோனாகக் காட்சி நல்கினார். சிவபெருமானைக் கண்ட குபேரன் உடனே அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். துதி மாலையும் சூட்டினார். குபேரனின் துதியால் மகிழ்ந்த விஜயாபுரி நாயகனான சிவபெருமான், குபேரனுக்கு வரமளித்து, "உன்னுடைய பெயரால் இத்தலம் **குபேரத்தலம்** என்பதோடு **தக்ஷிண அளகை (தென் அளகாபுரி) என்றும்** அழைக்கப்பெறட்டும் என்று கூறி மறைந்தார். இதுபோன்ற

செய்திகளையும் குபேரன் பராசரமுனிவரிடம் தெரிவித்து, கரதலேச்வரரையும் அவருடன் சென்று வணங்கி 10 கிராமங்களையும் நன்கொடையாய் அளித்து அங்கிருந்து புஷ்பக விமானமேறிச் சென்றார். அன்று முதல் இத்தலம் **“அளகாபுரி”** என்றழைக்கப்பட்டது என்பதாக அளகாபுரி வர்ணனத்தை இந்த எழுபத்தோறாம் (அத்யாயமாகிற இரண்டாம்) அத்யாயத்தினை விளம்பி நிறைவேற்றினார்.

எழுபத்தோறாம் அத்யாயக் கதைச்சுருக்கம் முற்றும்

--- ✿ ----

எழுபத்திரண்டாம் அத்யாயம்

சௌனகர் -

பராசர முனிவர் எதற்காக அம்ருதமய லிங்கத்தைச் சமீவனத்தில் நாட்டினார். அம்ருதம் எவ்வாறு கொணரப்பட்டது ? எவ்விதம் காக்கப்பட்டது ? எவரது பெயரைக் கேட்ட மாத்திரத்தில் முக்தி ஏற்படுகின்றது ? போன்றவற்றை அறியும் ஆவல் தமக்குள்ளதாக சூதரிடம் தெரிவிக்கின்றார். அதைக்கேட்ட சூதர், முன்பொருகால் தேவதானவாதிகளால் கடைந்து அம்ருதம் எடுக்கப்பட்டது . அதனால் அனைவரும் மகிழ்ச்சியுற்றனர். விஷ்ணுவுடன் அம்ருதத்தையும் காத்து வந்தனர். சிலநாட்கள் கழித்து சிவனருள்பெற விரும்பிய அவர்கள் குடத்திலுள்ள அம்ருதத்தை தேவபித்ரு முனிகணங்களுக்கு முறைப்படி பிரித்தளித்தனர். தேவர்களோவென்னில், அசுரர்களை வஞ்சித்து அவர்களது பகுதியையும் சேர்த்துப் பருகினர். உயர்ந்த தவத்தில் ஈடுபட்டிருந்த பராசராதி முனிவர்கள் அவரவர்களின் பங்கான அம்ருதத்தை எடுத்துக்கொண்டு

பல்வேறு முனிவர்களுடன் பூவுலகை அடைந்து மகிழ்ச்சியுடன் புண்ணியத் தலம், புண்ணிய தீர்த்தம், புண்ணியவனம் ஆகிய பெருமை மிகுந்த இடம் எங்குள்ளது? என்று காவிரியின் இரு மருங்கிலும் தேடி இறுதியில் வெற்றியைத் தரவல்லதும் காவிரியின் தென்கரையில் அமைந்ததும், அறிவைத் தருகின்றதும், அலங்காரம் ஐச்வர்யம் ஆகியவற்றால் மிளிர்வதும் ஆன சமீவனத்தை அடைந்து ஆங்கே பினாகபாணியைக் கண்டு வணங்கி அங்கேயே அம்ருத கலசத்தையும் நாட்டி, அனைத்து முனிவர்களையும் பாதுகாவலிட்டு வேறுதலப் பயணம் மேற்கொண்டார். தலப்பயணமாய்ச் சென்றவர்கள் திரும்பும் வரை அனைத்து முனிவர்களும் அம்ருத கலசம் நாட்டிய தலத்திலேயே தங்கி, சென்றார் வரவெதிர்பார்த்து காத்திருந்தனர்.

இதற்கிடையில் தேவர்களால் ஏமாற்றத்தை அடைந்த தானவர்கள் அமுதம் உண்டு களிக்க ஆவலுடையவர்களாய் அளகாபுரியில் பராசர முனிவரின் முன்னிலையில் அமைந்தவர்களுடன் போரிட லவணாசுரனின் புதல்வர்களான தண்டகாதியர் பெருஞ்சேனை, கூரிய படைக்கலன்கள் ஆகியவற்றுடன் ஆகாச மார்கமாக அளகாபுரி வந்தடைந்தனர். அவர்களுள் தண்டகன் 8,000 வீரர்களுடன் அளகையின் தென் பகுதியையும், வீரன் 10,000 வீரர்களுடன் மேற்பகுதியையும், வஞ்சகன் 6,000 வீரர்களுடன் கீழ்ப்பகுதியையும், தஞ்சகன் 18,000 வீரர்களுடன் வட பகுதியையும் முற்றுகை இட்டனர். அதைக் கண்டு அச்சமுற்ற முனிவர்கள் அமுத கலயத்தினை புவியினுள் வைத்து புதைப்போமென திட்டமிட்டு, தேவேந்திரனை அணுகி அமுதத்தைக் காக்கவும் அசுரர்களை வெல்லவும் வேண்டினர். அமுதத்தை அசுரர்கள் கைப்பற்றிவிட்டால் உலகழிவு ஏற்படும் என்றும் ஆரவாரித்தனர். இதைச் செவிமடுத்த தேவேந்திரன் தம் படைவீரர்களை அசுரர்களின் கண்களில் படாவண்ணம் மேகம், கற்கள், புழுதி

போன்றவற்றால் மறைப்பதற்கும் அசுரர்களுடன் போரிட்டு அவர்களையும் அழிக்கவும் உத்தரவிட்டான். தேவர்படை வீரர்களும் தேவேந்திரனின் ஆணைப்படி நடந்து அமுதக் கலயத்தை மறைத்து விட்டனர். அவ்வாறு காப்பாற்றப்பட்ட அம்ருதம் காலத்தினால் கடினமாகி, கையாலும் பிசையப் பெற்றதாய் கூஷ்மாண்ட (பூச்சுணைக்காய்) வடிவம் பெற்றது. தேவர்களும் முனிவர்களும் சிவபெருமானின் அருள்பெற வேண்டி அவ்வடிவத்தைப் பூசிக்க சிவபெருமான் ஆவிர்பவித்த சமீவனம் (வன்னிக்காடு) புண்ணியத்தை அளிக்கவல்லது. அளகேச(குபேர)னால் பூசிக்கப்பட்டது. ஆதி காலத்தில் பராசர முனிவரால் போற்றப்பட்டது. பாபம் போக்கும் தலமாகையால் இங்கே பற்பல முனிவர்கள் தலவாசம் செய்து, தவம் புரிந்து சிவபெருமானைத் துதித்துப் பேறு பெற்றுள்ளனர் என்பதாக "அமுதக்காப்பு" எனப்படும். இந்த எழுபத்திரண்டாம்) அத்யாயமாகிற மூன்றாம்) அத்யாயத்தினை விளம்பி நிறைவேற்றினார்.

எழுபத்திரண்டாம் அத்யாயக் கதைச்சுருக்கம் முற்றும்

எழுபத்து மூன்றாம் அத்யாயம்

சௌனகர் –

"அரக்கர்களை முனிவர்கள் எவ்வாறு வென்றனர் ? அளகாபுரியில் சிவபெருமானின் தோற்றமும், அதன் பயன் களும் எத்தகையது?" என்பதையெல்லாம் விளக்கி அருளுங்கள்" என சூதரிடம் வேண்டினார். சௌனகரின் விருப்பமறிந்த சூதர், அளகாபுரியின் பெருமைகளை முதலில் விளக்கி சிறப்பு வாய்ந்ததான இத்தலத்தில் பராசரமுனிவர் அசுரர்களின் அழிவைக் கருத்திற்கொண்டு சிவபெருமானைத்

துதிக்கிறார். துதியால் மகிழ்ந்த சிவபெருமான், “முனிவரே அச்சம் தவிப்பீர். அசுரவதத்திற்காகவே நான் சக்தியைத் தோற்றுவிக்கிறேன். அதனால் அசுரர்களிடமிருந்து வெற்றி கிடைக்கும்” என்று கூறி மறைந்தார். சிவபெருமானின் அனுக்ரஹத்தால் ஆனந்தவல்லி அம்பிகையின் தோற்றம் நிகழ்கிறது. அம்பிகையும் தன்னுடைய சக்தியை ஏகவீரா, ஜயந்தீ, மர்தினி, சண்டகாதினீ ஆகிய வகையில் நான்காகப் பிரித்து நாற்புறத்தினின்றும் அசுரர் படைகளை ஒடுக்க அனுப்பி வைத்தாள். பற்பல துர்நிமித்தங்களும் தோன்றின. அசுரர் படைகளும் அஞ்சி நடுங்கின என்பதாகப் போர்த்தொடக்கம் எனப்படும் இந்த எழுபத்து மூன்றாம் (அத்யாயமாகிற நான்காம்) அத்யாயத்தினை விளம்பி நிறைவேற்றினார்.

எழுபத்துமூன்றாம் அத்யாயக் கதைச்சுருக்கம் முற்றும்

எழுபத்துநான்காம் அத்யாயம்

சூதர்,

ஆனந்தவல்லி அம்பிகையால் ஏவப்பட்ட சக்திகள் ஏகவீரா, ஜயந்தீ, மந்தினீ, சண்டகாதினீ ஆகிய நால்வர். அவர்களுள் ஏகவீரா என்பவர் தண்டகாசுரனுடன் போரிடுகிறார். போரில் தண்டகனை அடித்து வீழ்த்துகிறார் ஏகவீரா. பின்பு வீராசுரனுக்கும் சக்திதேவியான ஜயந்தீ என்பவருக்கும் கோரமான போர் நடைபெறுகிறது. போரில் வீராசுரன் மாண்டுவிடுகிறான். என்பதாக தண்டகவீராசுர

வதங்கள் எனப்படுகின்ற இந்த எழுபத்துநான்காம் (அத்யாயமாகிற ஐந்தாம்) அத்யாயத்தினை விளம்பி நிறைவேற்றினார்.

எழுபத்துநான்காம் அத்யாயக் கதைச்சுருக்கம் முற்றும்

---- ❀ ----

எழுபத்து ஐந்தாம் அத்யாயம்

சூதர்,

தண்டகனும், வீரனும் மாண்டபின் அவர்களின் உடன்பிறப்பான வஞ்சகனுக்கும் மர்தினீ சக்திக்கும் போர் நடைபெறுகிறது. போரில் தன் வலிமையைக் காட்டுவதாய்க் கொக்கரித்துக் கொண்டுள்ள வஞ்சகாசுரன், "இதுவரை பெண் என்பதால் உன்னை விட்டு வைத்தேன். இனி அத்தோஷம் வந்தாலும் யானுன்னை விடேன்" என்று மர்தினியின் அருகே சென்றிட, மர்தினி அவனை வெட்டி வீழ்த்தினாள். வஞ்சகாசுரன் வதமறிந்த ஆனந்தவல்லி தேவியும் மிக்க ஆனந்தமடைந்தாள்.

வஞ்சகாசுரன் மாண்டதை எண்ணி சினமுற்ற தஞ்சகன் பற்பல ஆயுதங்களுடன் சிம்ம புலிகளின் வலிமையோடு காற்று வேகத்தில் போர்க்களம் புகுந்து, சண்டக்னிதேவியை போரிடவழைத்தாள். சண்டிகையும் 8 கைகளில் படைக்கலன்களோடு தஞ்சகனுடன் போரிட்டாள். அப்போது தஞ்சகன் ஆக்னேயாஸ்த்ரம் பிரயோகிக்க

சண்டிகாதேவி வருணாஸ்திரம் விட்டு அதை முறியடித்தாள். இவ்வாறு ஸம்மோஹனம், வாருணம், கௌபேரம் போன்ற அஸ்திரங்களை அசுரனும், அம்பிகையும் பொழிந்து தள்ள, போரினால் இருவருக்கும் உடம்பில் ரணகாயங்கள் ஏற்பட்டன. போரினைக் கண்டு திசையே நடுங்கியது. அத்தருணம் வான்வழிச் செய்தி கேட்கிறது. செய்தியைச் செவிமடுத்த சண்டகாதினி, எருமையொன்றை வாகனமாகக் கொண்டு அதன் கொம்புகளால் தஞ்சகாசுரனைத் தாக்கச் செய்து அசுரனை மூர்ச்சையடையவும் செய்துவிடுகிறாள். தஞ்சகாசுரனின் இறுதி நிலையை உணர்ந்து, அவன் மூர்ச்சையிலிருந்து தெளிந்தெழும்புங்கால் "கடைசி விருப்பம் ஏதாவதிருப்பின் கூறு, நிறைவேற்றி வைக்கிறேன்" என்று தஞ்சகனிடம் கேட்கின்றாள் சண்டகாதினீ. அதைக்கேட்ட தஞ்சகாசுரன், "நான் உன்னிடம் போரிட்டு விரணம் (பலத்தகாயம்) அடைந்துள்ளேன். சண்டகாதினீயாகிய நீயும் கோடி விரணம் (பலத்த காயம்) அடைந்துள்ளாய். ஆதலால் அம்பிகையே நீ கோடிவிரணமுடையாள் என்ற பெயரில் இவ்வூரில் கோயில் கொண்டருள் பாலிக்க வேண்டும். இவ்வூரின் இறைவனும், இவ்வூரும் முறையே தஞ்சபுரீச்வரர், தஞ்சபுரீ எனப்பெயர்கொண்டு என்பெயராலேயே சிறந்து விளங்கவேண்டும்" என்று தம் இறுதி விருப்பத்தை சக்தியிடம் வெளிப்படுத்தினான். சண்டகாதினியாகிய சக்தி தேவியும் தஞ்சகனின் விருப்பு மொழிகளை ஆனந்தவல்லி அம்பிகை உடனுறை சிவபெருமானிடம் தெரிவித்து அவனது ஆசையையும் நிறைவேற்றி, மோக்ஷமுமடையச்செய்தாள்.

தஞ்சகனின் வேண்டுகோளால் கோடிவிரண (கோடிவன)முடையாளாக அருள்பாலித்துவரும் அம்பிகையை பூசித்து வணங்குவோருக்கு நோய்களால் ஏற்படும் தொந்தரவு முதலியவை நீங்குவதோடு விரும்பிய

அனைத்தும் கிட்டும் என்பதாக வஞ்சக தஞ்சகாசுரவதங்கள் எனப்படுகின்ற இந்த எழுபத்தைந்தாம் (அத்யாயமாகிற ஆறாம்) அத்யாயத்தினை விளம்பி நிறைவேற்றினார்.

எழுபத்தைந்தாம் அத்யாயக் கதைச்சுருக்கம் முற்றும்

------- -------

எழுபத்தாறாம் அத்யாயம்

சௌனகர் –

பரம தார்மிகரான பராசர முனிவர் முன்னாளில் அம்ருத தீர்த்தத்தையும், சுதாலிங்கத்தையும் எவ்வாறு ஏற்படுத்தினார் என்பதனைத்தையும் விரிவாகக் கூறுங்கள்" என்று சூதரிடம் கேட்டார். அதற்குச் சூதர்,

தேவாசுரயுதத்தில் பெருஞ்சைன்யங்களுடன் அசுரராஜ்யம் க்ஷீணமடைய தேவர்கள் வழி கிடைக்கப்பெற்ற அமுத கலசத்தை அளகேசரின் தெற்கில் பராசர முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பெற்றது. (அவ்வமுத கலசத்)தைக் கண்டெடுத்தார் பராசர முனிவர். குடத்தினுள் வைக்கப்பட்டிருந்த அமுதம் கட்டியாக இருந்ததை எண்ணி மகிழ்ந்து சுதாகும்பம் வைக்கப்பட்டிருந்த இடத்தில் பராசர முனிவர் சுதா புஷ்கரணி எனும் அமுத தீர்த்தத்தை நிறுவினார். அத்தீர்த்தத்தில் கங்கை ஆவாஹிக்கப் பட்டு தினம் ஆயிரக்கணக்கான முனிவர்கள் அதில் நீராடினர். அத்தீர்த்தத்தில் தேவரிஷி பித்ரு தர்ப்பணங்களைப் பலர் மேற்கொண்டனர். பின்பு கட்டியாயிருந்த அம்ருதத்தை கையால் பிசைந்து ஆகம முறைப்படி அளகாபுரி நாதருக்குத் தெற்கில் மூன்று விற்கடை தூரத்தில் அவ்வம்ருத லிங்கத்தை

நாட்டினார். கரதலத்தால் (பிசைந்து) பிடித்து ஸ்தாபித்ததால் "கரதலேசம்" எனப் பெயர் ஏற்பட்டது. ஆங்கே தேவர்களும் தத்தம் கரங்களின் நுனியால் பூமியைப் பறித்து நிறுவிய தீர்த்தம் கரதல தீர்த்தமாயிற்று. அதன் தென்கரையில் அருள்பாலிக்கும் கேசவனை முதலில் பூசித்து அனுமதி பெற்றுப் பின் கரதல தீர்த்த ஸ்நானம் மேற்கொள்ளுதல் வேண்டும். ஸ்நானம் செய்யும் போது,

க்ஷீரார்ணவ ஸமுத்பூத தேவரக்ஷண காரக ।
ஸ்நாஸ்யாமி தவதீர்த்தே ச தன்மயே நிர்மலே ஜலே ॥

எனக் கூறப்பட்ட மந்திரத்தைச் சொல்லவேண்டும். இரண்டு லிங்கங்களை நாட்டுதலும், இரு தீர்த்தங்களை தோற்றுவித்தலும் சித்திரையில் சித்திரை நாளில் நிகழ்ந்ததால் அன்றாங்கே நீராட்டமும், இறைவழிபாடும் மிகுந்த பயனளிக்கும்.

அத்தலத்தில் புரியும் தானம் எல்லையற்ற பயனைத் தரும். இவ்வாறாக பராசர முனிவர் தாமடைந்த அனுபவத்தைத் தாரணியோர் அறியுமாறு வெளிப்படுத்தி யிருக்கின்றார். அத்தனைச் சிறப்புடைய தலபுராணம் அங்க தேசத்திலிருந்த வேதியர் முக்தியடைந்தது போல் செளனகரே உமது முக்தியின் பொருட்டு உபதேசிக்கப்பட்டது. துஷ்டர்களிடம் இதனைக் கூறாது சிஷ்டர்களிடமே தெரிவித்து, காத்து வாருங்கள் என்பதாக அம்ருத லிங்க மஹிமை எனப்படும் இந்த எழுபத்தாறாம் (அத்யாயமாகிற ஏழாம்) அத்யாயத்தினை விளம்பி நிறைவேற்றினார்.

எழுபத்தாறாம் அத்யாயக் கதைச்சுருக்கம் முற்றும்

----- ❖ -----

எழுபத்தேழாம் அத்யாயம்

சௌனகர் -

"கதையைக் கேட்பதால் முக்தி என்பது கலியுகத் தர்மமாகும். ஆதலால் பாபமனைத்தும் ஒழியத்தக்கதான புண்யமான சிவசரிதத்தையும், இத்தலப்பெருமையினை அங்கதேசத்து வேதியர் அறிந்த முறையினையும், முக்தியடைந்த விதத்தையும், அறிவதில் நாங்கள் ஆவல் கொண்டுள்ளோம். அதைத் தாங்கள் எடுத்துரைப்பீராக" என்று சூதரிடம் வேண்டினார். அதைக் கேட்ட சூதர்,

"அனைத்துமறிந்த நீவிர் இதனையுரைக்கக் கேட்பது வியப்பைத் தருகின்றது. இருப்பினும் யானறிந்த வகையில் அங்க தேசத்து வேதியரின் கதையை தற்போது உங்களுக்குக் கூறுகின்றேன். ஜம்பூத்வீபத்தில் அங்கதேசமுள்ளது. அத்தேசத்தின் நடுப்பகுதியில் வேதியர்களின் இருப்பிடம் உள்ளது. ஆங்கே எப்போதும் வேதமோதுபவர்களின் வேத ஒலியால் சுத்தீகரிக்கப்பெற்றதும், குணங்களனைத்தையும் கொண்டதான "தர்மசாலை" என்றழைக்கப்படும் இடமொன்று உண்டு. அந்த தர்மசாலையில் ஆசாரநிஷ்டரும் யக்ஞசீலரும் கொடைவள்ளலுமான "யக்ஞசர்மா" என்பவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு அழகான புதல்வனொருவன் தோன்றினான். 5ம் வயதில் உபநயனம் செய்துவைத்த அவனது தந்தை கல்விகற்க தம் புதல்வனை குருகுலம் அனுப்பி வைத்தான். கல்விகற்றுத் திரும்பிய புதல்வனுக்கு மணம் முடிக்கவும் "யக்ஞசர்மா" விரும்பினான். யக்ஞசர்மாவின் மகன் தன் தந்தையார் மேற்கொள்ளும் வேள்விக்கு பயன்தரும் ஸமித்துக்களை எடுத்துவர வனம் புகுந்தான். வனத்தில் நகைச்சுவையை விரும்பும் தர்மசர்மவைக் கண்டான். அத்தருணம் நகம், முடி, ஜடை போன்றவற்றுடன் மாலுதானர் என்ற பெயரில், எதிர்வந்த யோகியை தர்மதர்மா, "யாரது நீண்ட சடைமுடிபெற்றவர் ?

விறகு போல் உலர்ந்த சரீரம்" என்று ஏளனம் செய்ததோடல்லாமல் "பிசாசு மாதிரி எதிர்வந்த இவரைக் கல்லால் அடித்துக்கொல்வேன்" என்று எடுத்தான். ஆனால் மாலுதானர் அவர்களின் அக்ஞான தோஷம் அவ்விதம் செயல்புரியத் தூண்டுகிறது. அதைக் களைந்தே ஆகவேண்டும் என்ற உயர்ந்த எண்ணங்கொண்ட மாலுதானரை விளங்கனி அளவுள்ள கல்லால் தர்மசர்மா அடித்து விடுகிறான். அப்போது கோபமடைவதற்கு பதிலாக தர்மசர்மாவை அணுகிய மாலுதானர் என்னை எதற்காக அடித்தாய் ? அதனால் பயன் என் விளைந்தது ?" என்று வினவினார். பிறகு "என்னைக் கல்லால் அடித்ததால் நீயும் உன்னைச் சேர்ந்த இவ்வைந்து பாலகர்களும் கல்லாக நின்று உரிய காலத்தில் முக்தி பெறுவீர்" என்று சபித்துவிட்டு புறப்பட முயன்றார். உடனே சாபவயப்பட்டவர்கள் அறிவின்மையால் செய்த தவறினை உணர்ந்து வேறுவழியின்றி மாலுதானரையே சாபவிமோசனம் வேண்டிச் சரணடைந்தனர். அதைக்கண்ட மாலுதானர்,

"இந்த பிரம்மசாபம் நீங்க வேண்டுமாகில் காவிரியின் தென்பகுதியிலுள்ள அளகாபுரி சென்று சுதா புஷ்கரிணியில் நீராடி பற்பல தானங்களைப் புரிந்து பராசரக்ஷேத்திரபுரீச்வரரையும், கரதலேச்வரரையும் போற்றிப் பணிவீர்களாக என்று சாபவிமோசனத்தின் வழியை எடுத்துரைத்தார். முனிபுத்ரர்களும் அளகாபுரி வந்தடைந்து அமுதபுஷ்கரிணியில் நீராடி தானம் பற்பல மேற்கொண்டு ஈச்வரனை வணங்கி பிரம்மசாபமான பாபத்திலிருந்து விடுதலை பெற்றனர். இத்தலத்தில் செய்யும் அன்னதானம் காளஹஸ்தி, காஞ்சீ, அருணாசலம் போன்ற க்ஷேத்திரங்களில் செய்வதைக் காட்டிலும் அதிகப்பயன் தரக்கூடியது. இந்த சுதாபுஷ்கரிணியின் தென்கரையில் ஸ்ரீதடேச்வரர் என்ற

பெயரில் ஆதிவிஷ்ணு அருள்பாலிக்கின்றார். இத்தலத்திறைவர்களை மகிழ்வித்தால் மனிதர்கள் விரும்பிய பயனை அடையப் பெறுவார்கள்.

இவ்வாறாக சூதபுராணிகர் அங்கதேசத்து விப்ரர் முக்தியடைந்த கதை மற்றும் "தீர்த்தத்தின் பெருமை" எனப்படும் இந்த எழுபத்தேழாம் (அத்யாயமாகிற எட்டாம்) அத்யாயத்தினை விளம்பி நிறைவேற்றினார்.

இந்த எழுபத்தேழாம் அத்யாயக் கதைச்சுருக்கத்துடன் எட்டு அத்தியாயங்களைப்பெற்ற **அளகாபுரி மாகாத்மியம்** என்கிற **தஞ்சைநகர்ப்பெருமை** கூறும் நூல் இனிதே நிறைவடைகின்றது

சுபம்

श्रीः

श्री गणाधिपतये नमः श्रीसरस्वत्यै नमः श्रीगुरुभ्यो नमः

अलकापुरिमाहात्म्यम् *

सप्ततितमोऽध्यायः

शौनकः –

सूत सूतमहाभाग पुराणपठने रत ।
पुराणनैमिशे क्षेत्रे सत्रान्ते मुनिसंकुले ॥ 1

ब्रह्मर्षिगणसंयुक्ते देवर्षिगणसेविते ।
नानालङ्कारसंयुक्ते यूपस्तम्भैरलङ्कृते ॥ 2

सतताध्वरसंजातधूमस्तोमवितानिते ।
आह्वायितेन्द्रप्रमुखे वेदध्वनिपवित्रिते ॥ 3

आश्रावयेति शब्दैश्च पूर्यमाणदिगन्तरे ।
कथाप्रसङ्गे भवता लोकोपकृतिशालिना ॥ 4

काशीपुर्याश्च माहात्म्यं तत्समानं तथैव च ।
कथितं पुण्ययोगेन तत्र चैव महाश्रुतम् ॥ 5

---

* B. 1838/d. 10042 Sarasvati Mahal Library, Thanjavur.

तन्मध्ये च प्रसङ्गेन दक्षिणालकवैभवम् ।
कथितं सङ्ग्रहेणैव कुत्र तद्दक्षिणालकम् ॥ 6

कस्य दक्षिणभागे च वर्तते सालकापुरी ।
किमुद्दिश्य कुबेरेण तत्र देवः प्रपूजितः ॥ 7

तत्र का वा नदी पुण्या वनं तत्र किमस्ति वै ।
एते च मुनय स्सर्वे मां पुरस्कृत्य संस्थिताः ॥ 8

तस्मादहं भवन्तं च पृच्छामि श्रोत्रलोलुपः ।
भवदीयकृपायाश्च पात्रभूताःद्विजोत्तमाः ॥ 9

बहुमन्यस्व मां सूत ! व्यासवद्विगतस्पृह ।
स्तोतुं वयमशक्ताश्च भवन्तं मन्दबुद्धयः ॥ 10

शृणु ! शौनक ! वक्ष्यामि रहस्यमतिपुण्यदम् ।
कैलासस्योत्तरे पार्श्वे वर्तते चोत्तरालका ॥ 11

कुबेरवासस्थानं च महेश्वरसखस्य च ।
जम्बूद्वीपे महापुण्ये मेरोश्चैव तु दक्षिणे ॥ 12

भारते कर्मभूमौ च कावेर्याश्चैव दक्षिणे ।
कावेर्याश्चैव माहात्म्यं कथितं खलु ते पुरा ॥ 13

स्मरणात्पापशमनी दर्शनान्मोक्षदायिनी ।
कावेरीति नृणां लोके वर्तते सा महानदी ॥ 14

अलकायाश्च वृत्तान्तं सावधानमना शृणु !।
यस्याः श्रवणमात्रेण वर्तते कीर्तिवृद्धयः ॥ 15

अस्ति वैश्रवणो नाम विश्वाख्यस्य वै सुतः
(सुतो विश्रवसोः हि वै) ? ।
लोकपालत्वतां प्राप्तः महादेवप्रसादतः ॥ 16

बाल्यादारभ्य कुरुते शिवपूजां मनोहराम् ।
पुण्यभूमिषु सर्वत्र नदीतीरेषु सर्वशः ॥ 17

कदाचित्समये सोऽपि कावेरी पुण्यनिम्नगाम् ।
प्राप्तश्चाकाशचारी च पुष्पकेण सुहृद्व्रत ! ॥ 18

तत्तीरसौष्ठवं दृष्ट्वा निर्वैरं निरुपद्रवम् ।
शिवं सम्पूजयामीति मनश्चक्रे सुनिश्चलम् ॥ 19

तदा त्वाकाशवाणी समुद्भूता च तं प्रति ।
उवाचातिप्रियकरी देवेन परिचोदिता ॥ 20

आकाशवाणी –

भो ! भो ! विश्रवसः पुत्र ! शिवपूजापरायण ।
भवत्कृतेन पुण्येन शिवस्यैव प्रसादतः ॥ 21

अत्रापि शिवपूजां च करोमीति मनस्त्वभूत् ।
कर्तुं च शिवपूजां च स्थानं वक्ष्यामि तच्छृणु ॥ 22

कावेर्यादक्षिणे तीरे अर्धयोजनसम्मिते ।
शमीवृक्षो महांस्तत्र वर्तते बहुशाखवान् ॥ 23

तन्मूलेऽस्ति महालिङ्गं ज्योतिर्मयमनुत्तमम् ।
लिङ्गरूपी च भगवान् पश्चिमाभिमुखस्थितः ॥ 24

वशिष्ठेश्वरसंज्ञस्य नैर्ऋत्यां पादयोजने ।
पुरा देवासुरे युद्धे देवाश्चैव पराजिताः ॥ 25

शमीमूलमुपाश्रित्य गत्वा भूभागमुत्तमम् ।
उद्विग्नहृदया जाताः शिवस्मरणपूर्वकम् ॥ 26

तेषां च विजयं दातुं यथा जेष्यन्ति दानवान् ।
समुद्बभौ लिङ्गरूपी शमीमूलस्वयं हरः ॥ 27

पश्चिमाभिमुखो भूत्वा शक्त्या च परमायुतः ।
स्कन्दनन्दिगणाः सर्वे प्रमथाश्च समागताः ॥ 28

दृष्ट्वा तस्योद्भवं देवास्त्यक्त्वा दुःखं च युद्धजम् ।
चक्रुः पृथक् पृथक् पूजां मरुतो वासवादयः ॥ 29

वन्यैरन्यैस्च कुसुमैरुपचारैर्यथाविधि ।
निवेद्य कन्दमूलानि तुष्टुवुर्जगदीश्वरम् ॥ 30

पूजा स्तोत्रावसाने च भगवान् भूतभावनः ।
राथन्तराख्ये कल्पादौ विजयं प्रददौ तदा ॥ 31

लब्ध्वा वा विजयं ते च महावीरपराक्रमाः ।
जित्वा च दानवानीकं सुखेन निवसन् पुरा ॥ 32

तदा प्रभृति तत्स्थानं देवानां विजयावहम् ।
विजयाख्या पुरी नाम्ना महावीरपुरीति च ॥ 33

प्रसिद्धिमहमल्लोके तत्र त्वमपि पूजय ! ।
एकपुष्पार्चनेनापि महादेवः प्रसीदति ॥ 34

तव यन्मनसोऽभीष्टं तत्र दास्यति वै ध्रुवम् ।
तदीयं वचनं सत्यं अवबुध्यस्व मानद (व ?)॥ 35

इत्युक्त्वा विररामाथ वाणी चाकाशगोचरा ।

इति श्री भविष्योत्तरमहापुराणे
उत्तरखण्डे विजयापुरीमाहात्म्ये
सप्ततितमोऽध्याय ॥

---- ❖ ----

एकसप्ततितमोऽध्यायः

सूत : –

इति श्रुत्वा च तद्वाक्यं शिवपूजा प्रसक्तधीः ।
अन्विष्यमाणस्तत्स्थानं दक्षिणाभिमुखो ययौ ॥ 1

तदुक्तसमये पश्चात् छमीमत्र प्रदृष्टवान् ।
अलङ्कृतं चीरवसनैः मुनिवृन्दैश्च सेवितम् ॥ 2

यत्राखुसर्पमार्जारैः सह क्रीडन्त्यहर्निशम् ।
यस्मिन्निवसतां पुंसां सर्वदा वर्तते कृपा ॥ 3

अकरोद्यत्र देवानां कृपादेवो महेश्वरः ।
ये ये पूजां प्रकुर्वन्ति देवदानवकिन्नराः ॥ 4

तेषां प्रसादं कुरुते विजयापुरिनायकः ।
आनन्दमूर्तिः कल्याणि शिवा यत्र प्रवर्तते ॥ 5

तस्याश्च कृपया नित्यं भवन्त्यानन्दनिर्भराः ।
आध्यात्मिकादि पीडा च यत्र नास्ति स्थलोत्तमे ॥ 6

ये ये वसन्ति तत्क्षेत्रे ये पश्यन्ति नरोत्तमाः ।
तेऽन्यत्र नैव गच्छन्ति स्थानमाहात्म्यवेदिनः ॥ 7

अवर्णनीयं तत्क्षेत्रं बहुपुण्यप्रदं नृणाम् ।
पूर्णानुग्रहकर्ता च भगवान् यत्र वै हरः ॥ 8

योगिनः सनकाद्याश्च नारदाद्यास्सुरर्षयः ।
नित्यवासं च कुर्वन्ति तत्स्थानस्य च वैभवात् ॥ 9

यत्राणुमात्रदानेन मेरुदानाधिकं फलम् ।
भवत्येव न सन्देहः शिवस्य वरदानतः ॥ 10

एकस्मिन्नपि विप्रे तु शाकेनान्नोदकेन वा ।
तोषिते पुण्ययोगेन कोटिर्भवति भोजितः ॥ 11

एतादृशं महाक्षेत्रं दृष्ट्वा च शमिमूलके ।
पादयोजनविस्तारं नानालङ्कारशोभितम् ॥ 12

आकाशादवरुह्याथ शमीमूलस्थितं हरम् ।
पराशरं ब्रह्ममुनिं ननामानन्दनिर्भरम् ॥ 13

समुनिस्तं प्रशस्याथ कुबेरं लोकपूजितम् ।
पप्रच्छ कुशलं सर्वे स्वागतासनपूर्वकम् ॥ 14

सोपि चोत्त्वाय कुशलं वृत्तान्तं चाखिलं मुने : ।
न्यवेदयत्प्रीतियुक्तो वाक्यैरतिसुविस्तरैः ॥ 15

श्रुत्वा सर्ववृत्तान्तं मुनिः परमधार्मिकः ।
मानयित्वा विशेषेण शिवपूजापरायणम् ॥ 16

शिवपूजां कुरुष्वेति वचनं चेहमब्रवीत् ।

पराशरः –

अहो भाग्यतमस्त्वं हि येन दृष्टमिदं स्थलम् ॥ 17

एतत्क्षेत्रस्य महिमा वर्ण्यते केन वा भुवि ।
स्वयमेव महादेवः प्रसन्नो लोकनायकः ॥ 18

अहं चापि समाराध्य लब्ध्वा नित्यत्वमेव च ।
अमृतं च मया लब्धं तेनाहं सुकृतीकृतः ॥ 19

मया च स्थापितश्चात्र तत्पीयूषमयशिवः ।
देवैस्सह महाभाग स्थाने च परिपावने ॥ 20

त्वमप्यत्र महादेवं समाराध्य जगन्मयम् ।
लब्ध्वा यथेप्सितान्कामान् देवस्य वरदानतः ॥ 21

निवसस्व स्वलोके च भक्त्या परमया युतः ।
इत्युक्तो मुनिना तेन कुबेरः प्रीतिसंयुतः ॥ 22

अकरोत्तस्य वै पूजां शमीमूले महेशितुः ।
वन्यैरन्यैश्च कुसुमैरुपचारैश्च वाक्यतः ॥ 23

यथा प्रसन्नो भवति पूजया परमेश्वरः ।
तथाकरोत्प्रीतियुक्तो महाभाग्यसमन्वितः ॥ 24

वाद्यभेदैरनेकैश्च नृत्तगीतपुरस्सरैः ।
यक्षकिन्नरगन्धर्वविद्याधरमहोरगैः ॥ 25

सहितैः भक्तियुक्तैश्च पूजयामास तं हरम् ।
नैवेद्यं बहुधा कृत्वा बहुभक्ष्यघृताप्लुतम् ॥ 26

तेन नैवेद्यजातेन तोषयामास वै जनान् ।
अन्नार्थितैश्त सर्वत्र दीनान्धकृपणादिकान् ॥ 27

पूजावसाने स्तुत्वा च देवं वाचामगोचरम् ।
अलङ्काराय देवस्य नाना रत्नोपशोभितम् ॥ 28

ददावाभरणं चैव बहुस्वर्णप्रकल्पितम् ।
द्वात्रिंशद्वर्णयुक्तेन स्वर्णेन परिकल्पितम् ॥ 29

सूर्यप्रकाशसदृशं चन्द्रकोटिसुशीतलम् ।
पूर्णचन्द्रप्रतीकाशं मुक्ताफलविराजितम् ॥ 30

वस्त्राणि देवयोग्यानि सुसूक्ष्माणि नवानि च ।
दृष्टिप्रियाणि देवस्य ददौ तत्र धनेश्वरः ॥ 31

कदाचित्समये पूर्वमात्मनः प्रतिपादितम् ।
सुमन्त्रेणातितेजिष्ठं सुनाभमिति विश्रुतम् ॥ 32

रत्नतेजोमयं दिव्यं मूलं मूल्यप्रकल्पने ।
तच्चापि देवदेवस्य ददौ प्रीतिसमन्वितः ॥ 33

आत्मनः प्राणसदृशं तेन तुष्टोऽभवद्धरः ।
प्रसन्नतां ययौ पश्चाच्चन्द्ररेखावतंसकः ॥ 34

त्रिणेत्रो वृषभारूढः करुणापूर्णविग्रहः ।
पार्वत्या सहितो भूत्वा स्कन्दनन्दिसमन्वितः ॥ 35

कोटिसूर्यप्रतीकाशश्चन्द्रकोटिसुशीतलः ।
तं दृष्ट्वा परमेशानं कालकण्ठं वृषध्वजम् ॥ 36

पपात पादपर्यन्ते यतो वाक्कायमानसः ।
पुनस्तुष्टाव परया वाचा भक्त्युपबृंहया ॥ 37

कुबेरः -

हे महेश ! कृपाकर शङ्कर !
प्रणतभक्तजनप्रिय ते नमः ।
विधृतशूलकपालगजाजिन-
प्रवरभूषणभूतिसिताकृते !॥ 38

अरुणकोटिसमप्रभभास्वते
चरणमर्दितभूतकुलायते ।
करणकारणकारणविग्रह-
स्मरणमात्रविमुक्तिपदप्रद ! ॥ 39

रविनिशाकरवह्निविलोचन !
त्रितयभूषितदिव्यशुभाकृते ! ।
विमल ! निर्मल ! विश्वविशांपते !
शरणमेव गतोऽस्मि तव प्रभो ! ॥ 40

एवं स्तुत्वा महादेवः कुबेरेण तदा विभुः ।
वरदोवाच भगवान् वरदानकृतोद्यतः ॥ 41

ईश्वरः –

कुबेरवरदोस्म्यद्य तव स्तोत्रेण लोकप ! ।
पूजया रत्नदानेन तव प्राणसमेन च ॥ 42

यद्यदिच्छसि तत्तेऽस्तु सर्वेषु भुवनेष्वपि ।
त्वन्नाम्ना पुरमेतत्तु प्रसिद्धिमभिधास्यति ॥ 43

दक्षिणालकपुरीत्येव सर्वलोकेषु विश्रुता ।
भविष्यति वरादद्य कुबेर भुवनेश्वर ! ॥ 44

इति दत्वा वरं तस्य कुबेरस्य महेश्वरः ।
अन्तर्धानमतोह्यासीद्विजयापुरीनायकः ॥ 45

एवं लब्ध्वा वरानिष्टान् कुबेरः परमेश्वरात् ।
उद्घोष्य सर्वलोकेषु स्थानं च विजयापुरम् ॥ 46

पुनः पराशरं प्राप्य नत्वा चाभिप्रसाद्य च ।
मुनिना च कृतं लिङ्गं सुधामयमनुत्तमम् ॥ 47

तेनैव सहिता गत्वा दृष्ट्वा करतलेश्वरम् ।
अत्यद्भुतं सुधालिङ्गं कूष्माण्डफलवस्थितम् ॥ 48

तत्सन्निधिगते तीर्थे देवतीर्थसमाह्वये ।
स्वगणैरन्वितो स्नात्वा वाग्यतः संयतेन्द्रियः ॥ 49

कृत्वा कृतार्थमात्मानं जन्मसाफल्यमाप्य च ।
तं पूजयित्वा विधिवत् प्रणम्य च यथाविधि ॥ 50

ग्रामान्दत्वा दशैकं च ययौ स्वं लोकमादरात् ।
पुष्पकं च समारुह्य तस्मिन्नेव क्षणेन तु ॥ 51

तदा प्रभृति तत्क्षेत्रमलकापुरमित्यभूत् ।
तस्मिन्पुन्यतमे क्षेत्रे ब्रह्मविष्ण्वादि सेविते ॥ 52

नित्यं च कलयांशेन वासो मोक्षप्रदायकः ।
क्षणं वा क्षणिकार्धं वा दिनं वाथ दिनार्धकम् ।
तेषां वासश्च कैलासे भविष्यति न संशयः ॥ 53

अघहरमतिपुण्यदायकं-
शुभकरमर्थदमायुषःप्रदं च ।
निवसति नियतं नरश्च यस्मिन् -
स भवति सर्वजनस्य चेश्वरश्च ॥ 54

इति श्री भविष्योत्तरमहापुराणे
क्षेत्रप्रशंसायां विजयापुरीमाहात्म्ये
अलकापुर्याख्यानं नाम
एकसप्ततितमोऽध्याय ॥

द्विसप्ततितमोऽध्यायः

शौनकः –

पाराशरः कथं तत्र किमर्थं शिवमव्ययम् ।
स्थापयामास पीयूषमयं लिङ्गमनुत्तमम् ॥ 1

आहृतं च सुधां तेन केनोपायेन तद्वद ।
यस्य श्रवणमात्रेण मुच्यन्ते सर्वजन्तवः ॥ 2

त्वन्मुखाम्भोजनिर्यातपुराणामृतमुत्तमम् ।
पातु ! कामाश्च वर्तन्ते मुनयो लोकपूजिताः ॥ 3

सूतः –

पुरा कदाचिच्छमये मिलिता देवदानवाः ।
मथित्वा च सुधां सर्वे सन्तोषेण समन्विताः ॥ 4

विष्णुना सहिताश्चैव ररक्षुरमृतं तदा ।
कतिचित्कालपर्यन्तं शिवानुग्रहमिच्छवः ॥ 5

कालेनानुग्रहं प्राप्य विभज्य च सुधां मनु ।
गणानां देवतानां च पितॄणां च गणस्य च ॥ 6

मुनीनां चैव सर्वेषां यथाभागं यथाविधि ।
अंशीकृतं च तेषां च दत्वा कलशपूरितम् ॥ 7

पपुः स्वांशं च देवाश्च वञ्चयित्वाथ दानवान् ।
पराशरो मुनीनां च श्रेष्ठश्च तपसि स्थितः ॥ 8

मुनीनामंशभूतं च गृहीत्वा च सुधां ततः ।
बहुभिर्मुनिभिस्साकं भुवं प्राप्य सुखेन च ॥ 9

स्थलवैशिष्ठ्यमन्विष्य विचचार भुवस्थलम् ।
पुण्यस्थलं पुण्यतीर्थं यत्र पुण्यतरं वनम् ॥ 10

अतस्तीरचरन्काले कावेर्याश्चैव तीरयोः ।
शमीवनं महापुण्यं दृष्टवान् विजयप्रदम् ॥ 11

कावेर्याद्दक्षिणे भागे सर्वालङ्कारशोभिते ।
अनन्तैश्वर्यसंयुक्ते दृष्ट्वा देवं पिनाकिनम् ॥ 12

अवलोक्य स्थलं सर्वं विमलज्ञानदायकम् ।
सर्वान्मुनीन्समानेतुं शिष्यांश्च समचोदयत् ॥ 13

संस्थाप्य कलशं तत्र रक्षयन्मुनिसंकुलैः ।
देशान्तरस्थिता ये च ये च द्वीपान्तरे स्थिताः ॥ 14

यावदागमनं तेषां तावत्तत्रैव संस्थिताः ।
आकाङ्क्षन्समुनीनां च समागमनमुत्तमम् । 15

वाञ्चिता दानवा देवैः सुधापाने विमोहिताः
अपश्यन्नलकायां च पराशरपुरोगमान् ॥ 16

सम्मील्य सर्वेह्यसुरा दण्डकप्रमुखास्तदा ।
लवणासुरपुत्राश्च बहुसैनिकसंवृताः ॥ 17

सम्प्राप्याकाशमार्गेण कामरूपधराःपरे ।
आहर्तुममृतं तत्र सुतीक्ष्णायुधधारिणः ॥ 18

दण्डकाष्ठसहस्रेण सेनया च समन्वितः ।
आश्रित्य दक्षिणं भागमलकां समुपाविशम् ॥ 19

वीरश्च दशसाहस्रैरसुरैर्बलदर्पितैः ।
आश्रित्य पश्चिमं भागमलकायाः समाविशम् ॥ 20

षट्सहस्रबलोपेतो वञ्चको बलदर्पितः ।
पूर्वद्वारमुपाश्रित्य न्यरुणद्विजयापुरीम् ॥ 21

तञ्जकश्चासुरो मूर्खो गजायुतबलान्वितः ।
अष्टादशसहस्रैश्च महाबलपराक्रमैः ॥ 22

असुरैरन्वितो मूर्खो वेगेनमहता युतः ।
न्यरुणच्चोत्तरं पार्श्वममृताहरणेच्छया ॥ 23

